மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண். 35/2024

வாக்குமூலம்: வா.சா.1 – சாரதாமணி

11.06.2025: சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : நான் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தம்பி கணேஷ்சன் காணாமல் போய்விட்டார் என்பதற்காக உரிமையியல் இறப்பு விளம்புகை மற்றும் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவர் காணாமல் போய் சுமார் 22 வருடம் ஆகிறது. அவர் காணாமல் போன சமயத்தில் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். அவர் காணாமல் போனது பற்றி காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்ததல்ல என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.